# உயிரின் வெளிச்சமே



அ.அல்போன்ஸ்
திருச்சி

அன்பின்மடல்

# உயிரின் வெளிச்சமே!

## அ.அல்போன்ஸ் திருச்சி

இயேசுவின் வாழ்வில் இடம்பெற்ற அற்புத நிகழ்வுகளில் மிகவும் ஆழமான இறையியல் அர்த்தம் கொண்டது **உருமாற்ற நிகழ்வு** ஆகும். இது ஒரு அதிசயக் காட்சி மட்டுமல்ல; இயேசு யார் என்பதை சீடர்களுக்கு வெளிப்படுத்திய விண்ணரசு அறிவிப்பாகும். சிலுவை என்ற துன்பப் பாதையை நோக்கி இயேசு சென்று கொண்டிருக்கும் தருணத்தில், அவரது தெய்வீக மகிமை ஒரு கணம் மனிதக் கண்களுக்குத் திறக்கப்பட்டது. இந்த நிகழ்வு, சிலுவையின் இருளுக்கு அப்பால் உயிர்த்தெழுதலின் ஒளி இருப்பதை அறிவிக்கும் இறைவனின் உறுதிமொழியாக அமைந்தது.

இந்நிகழ்வு மூன்று நற்செய்திகளிலும் *(மத் 17:1-8; மாற் 9:2-8; லூக் 9:28-36)* பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும்,



திருத்தூதர் பேதுரு தனது இரண்டாம் திருமுகத்தில் "நாங்கள் அவரது மாண்பை நேரில் கண்டவர்கள்....தூய மலையில் அவரோடு இருந்தபோது விண்ணிலிருந்து வந்த இக்குரலொலியை நாங்களே கேட்டோம்" *(2 பேது 1:16-18)*, என்று இந்த அனுபவத்தை நினைவுகூர்கிறார். ஆகவே, உருமாற்றம் என்பது ஒரு வரலாற்று நிகழ்வு மட்டுமல்ல; கிறிஸ்தவ

விசுவாசத்தின் மைய உண்மைகளை வெளிப்படுத்தும் தெய்வீக வெளிப்பாடாகும்.

இயேசு **பேதுரு, யாக்கோபு, யோவான்** ஆகிய மூவரை மட்டும் அழைத்துக்கொண்டு உயர்ந்த மலைக்குச் சென்று ஜெபித்தார் (லூக் 9:28). அங்கே அவர்கள் காண்பது இயேசுவின் உண்மையான அடையாளம். சிலுவை சுமக்கப்போகும் அதே இயேசுவே மகிமையின் ஆண்டவர் என்பதை அவர்கள் கண்ணால் கண்டனர்.

மத்தேயு கூறுகிறார்: "அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளி போன்று வெண்மையாயின. இதோ! மோசேயும் எலியாவும் அவர்களுக்கு முன் தோன்றி இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தனர். பேதுரு இயேசுவைப் பார்த்து, "ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைக்கட்டுமா? இது உமக்கு விருப்பமா?" என்றார். அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது ஒளிமயமான மேகம் ஒன்று அவர்கள்மேல் நிழலிட்டது. அந்த மேகத்தினின்று, "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர்பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவிசாயுங்கள்" என்று ஒரு குரல் ஒலித்தது. (மத். 17:1-8)

இந்தக் காட்சியில் நம் பார்ப்பது,
கதிரவனைப் போல் ஒளிர்ந்த இயேசுவின் முகம்,
வெண்மையான ஆடைகள்,
மோசேயும் எலியாவும் இயேசுவோடு உரையாடல்,
ஒளிமயமான மேகம்,

மேகத்தினின்று ஒரு குரல் ஆகியவை.

## 1. உருமாற்ற மலையில் வெளிப்பட்ட ஒளி

இங்குக் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், வானத்திலிருந்து ஒரு ஒளிக்கதிர் இயேசுவின் மீது விழுந்தது என்று விவிலியம் எங்கும் கூறவில்லை. சூரியன் தன் ஒளியை மற்றொருவரிடமிருந்து கடன் வாங்குவதில்லை; அது தன்னிடமிருந்தே ஒளிர்கிறது. அதுபோலவே, இயேசுவின் முகம் தன்னிடமிருந்தே பிரகாசித்தது.

இங்குச் சீடர்கள் கண்ட ஒளி, வெளியிலிருந்து இயேசுவின் மீது விழுந்த ஒளியல்ல; இயேசுவுக்குள் நித்தியமாக இருந்த தேவமகிமை, வெளியே பிரகாசித்த ஒளி ஆகும். இதுவே இந்த நிகழ்வின் மைய இறையியல் உண்மை.இது

மோசேயின் அனுபவத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. சீனாய் மலையில் இறைவனோடு பேசியபிறகு, மோசேயின் முகம் ஒளிர்ந்தது (விப. 34:29). ஆனால் அந்த ஒளி பிரதிபலித்த ஒளி; அது இறைவனிடமிருந்து பெற்ற ஒளி.

ஆனால் இயேசுவின் ஒளி அவரது சொந்த இயல்பின் ஒளி. அவர் ஒளியைப் பெற்றவர் அல்ல; ஒளியின் மூலாதாரம். அதனால்தான் யோவான், "அவரிடம் வாழ்வு இருந்தது; அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது" (யோவா. 1:4) என்று அறிவிக்கிறார்.

மேலும் இயேசுவே, "உலகின் ஒளி நானே." (யோவா. 8:12) என்று கூறுகிறார்.
அந்த ஒளியை பார்த்த இடம் இங்குதான்.
உருமாற்றத்தில் ஒளிர்ந்தது அவரது முகம் மட்டுமல்ல; அவரது உண்மையான அடையாளம்.

## 2. இந்த ஒளி — நித்திய தேவமகிமையின் வெளிப்பாடு



உருமாற்றத்தில் இயேசு புதிய மகிமையைப் பெறவில்லை. அவர் மனிதராகப் பிறந்தபோது தமது தெய்வீக மகிமையை இழக்கவில்லை. மாறாக, மனித உடல் என்ற திரைக்குள் அந்த மகிமையை மறைத்துக்கொண்டார்.
தாபோர் மலையில், அந்தத் திரை **ஒரு கணம்** விலகியது. அப்போது சீடர்கள் படைப்புக்கு முன்பே தந்தையோடு இருந்த மகனின் மகிமையை கண்டார்கள். இதுவே யோவான் 1:14-ன் ஆழமான பொருள்:
"அவரது மாட்சியை நாங்கள் கண்டோம்." அவர்கள் கண்டது மனிதனின் ஒளியல்ல; தேவனின் மகிமை.

## *3. இரண்டு திரைகள் தெய்வதரிசனம்*

*பழைய ஏற்பாட்டுக் காலத்து சந்திப்புக் கூடாரத்திலும் (விப.40) தேவாலயத்திலும் (1 அரசர்கள் 8) ஒரு காலத்தில் பிரகாசித்த அதே மகிமைதான் இது. கிறிஸ்துவின் நித்திய மகிமை அவர் மனித அவதாரம் எடுத்தபோது கைவிடப்படவில்லை; மாறாக, அது அவருடைய சரீரத்தால் மறைக்கப்பட்டு அதனுள் அடங்கியிருந்தது. பழைய ஏற்பாட்டுக் கால இஸ்ரவேலருக்கு சந்திப்புக் கூடாரத்தின் திரை எப்படியிருந்ததோ, அப்படியே சீடர்களுக்குக் கிறிஸ்துவின் சரீரம் இருந்தது.*

*1. கூடாரத்தின் திரை, கிறிஸ்துவின் சரீரம் இவ்விரு "திரை"களும் தேவனுடைய மகிமையைத் தங்களுக்குள் தாங்கிப் பாதுகாத்தன.*

*2. இவ்விரு "திரை"களும் கல்வாரி சிலுவையில் திறக்கப்பட்டன.*

## *2.1 இயேசுவின் திரை:*

*"அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, **அதைப் பிட்டு**, அவர்களுக்குக் கொடுத்து, “இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்றார்" (லூக்கா 22:19).*

*இறுதி இரவு விருந்தில் இயேசு கிறிஸ்துவின் உடல் உடைக்கப்பட்டது.*

அவர் சிலுவையில் அறையப்பட்டபோது, அவரது மனித உடல் காயப்பட்டு, இரத்தம் சிந்தப்பட்டது. அந்த உடல் மனிதகுலத்தின் மீட்புக்காக "உடைக்கப்பட்ட திரை" ஆனது.
கல்வாரியில் உடைந்த இரண்டு திரைகள். உருமாற்றத்தில் திரை சற்றே திறந்தது; கல்வாரியில் அந்தத் திரை உடைந்தது.

***2.2 ஆலயத்தின் திரை:***

"திருக்கோவிலின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது; நிலம் நடுங்கியது; பாறைகள் பிளந்தன. கல்லறைகள் திறந்தன;" (மத்தேயு 27:51).
இது ஒரு சாதாரண சம்பவமல்ல; மிகப் பெரிய இறையியல் அறிவிப்பு.
பழைய ஏற்பாட்டில் தேவனை அணுகுவதற்கு திரை தடையாக இருந்தது.
ஆனால் கிறிஸ்துவின் மரணத்தால் அந்தத் தடையே அகற்றப்பட்டது.
எபிரெயர் 10:19—20 இதைத் தெளிவாக விளக்குகிறது: "அவருடைய உடல் என்னும் திரையின் வழியாக அவர் நமக்குப் புதியதும் உயிருள்ளதுமான வழியைத் திறந்தார்." அதாவது, ஆலயத் திரை கிழிந்தது என்பது கிறிஸ்துவின் உடல் உடைக்கப்பட்டதன் வெளிப்புற அடையாளம்.

***4. மூன்று கூடாரங்கள்***

பேதுருவின் "மூன்று கூடாரங்கள்" — ஒரு ஆழமான அடையாளம்

உருமாற்றத்தைப் பார்த்த பேதுரு உடனே, "மூன்று கூடாரங்களை அமைப்போம்." (மத். 17:4) என்று கூறுகிறார்.
ஏன் அவர் "கூடாரம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்?
ஏனெனில் அவர் கண்ட மகிமை, பழைய ஏற்பாட்டில் திருக்கூடாரத்தில் இறங்கிய அதே தேவமகிமையை நினைவூட்டியது. ஆனால் பேதுருவுக்கு இன்னும் முழு புரிதல் வரவில்லை. மோசே, எலியா, இயேசு — மூவரையும் ஒரே நிலையில் வைத்தார்.
உடனே தந்தையின் குரல், "இவர் என் அன்பார்ந்த மகன்... இவருக்குச் செவிகொடுங்கள்." என்று அறிவித்தது. அதாவது,
கூடாரம் தேவனுக்காக அல்ல.
தேவனே மனிதர்களுக்குள் கூடாரமிட்டிருக்கிறார்.
இயேசுவே உண்மையான திருக்கூடாரம்.

## 5. ஒளிமயமான மேகம்

திருக்கூடாரத்தை மூடிய அதே மகிமையின் மேகம்,
சாலோமோனின் ஆலயத்தை நிரப்பிய அதே மேகம்,
இப்போது உருமாற்ற மலையிலும் தோன்றுகிறது.
இது ஒரு புதிய தேவன் அல்ல.
சீனாயில் பேசிய அதே தேவன்.
திருக்கூடாரத்தில் வாசம் செய்த அதே தேவன்.
ஆலயத்தை நிரப்பிய அதே தேவன்.
இப்போது தமது மகனை உலகிற்கு வெளிப்படுத்துகிறார்.

## 6. மோசேயும் எலியாவும்

**சட்டமும் இறைவாக்கினர்களும் கிறிஸ்துவில் நிறைவேறுதல்**



இந்த நிகழ்வில் மிகவும் ஆழமான இறையியல் அர்த்தம் கொண்ட காட்சி, மோசேயும் எலியாவும் இயேசுவோடு தோன்றி உரையாடியது ஆகும். இது வெறும் வரலாற்றுப் பிரமுகர்களின் தோற்றமல்ல; பழைய ஏற்பாட்டின் முழு இரட்சிப்பு வரலாறும் கிறிஸ்துவில் உச்சநிலையை அடைந்துவிட்டது என்பதை அறிவிக்கும் தெய்வீக அறிவிப்பாகும்.

"மோசே, எலியா என்னும் இருவர் அவரோடு பேசிக் கொண்டிருந்தனர். மாட்சியுடன் தோன்றிய அவர்கள் எருசலேமில் நிறைவேறவிருந்த அவருடைய இறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்." (லூக். 9:31)

இந்த ஒரு வசனத்தில் முழு பழைய ஏற்பாட்டின் இறையியல் அடங்கியுள்ளது.

### 6.1. மோசே — சட்டத்தின் பிரதிநிதி.

மோசே ஒரு தீர்க்கதரிசி மட்டுமல்ல; பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கையின் நடுவர். சீனாய் மலையில் இறைவனிடமிருந்து சட்டத்தைப் பெற்று, இஸ்ரவேல்

மக்களுக்கு அளித்தவர் (விப. 19-20). ஆகவே யூதர்களுக்கு "மோசே" என்ற பெயரே சட்டத்தைக் குறிக்கும்.
யூதர்கள் அடிக்கடி, "மோசே சொல்லியிருக்கிறார்..." என்று கூறியபோது, அது முழு சட்டத்தையும் குறித்தது.
ஆனால் இயேசு வந்தபோது, " திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம்; அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன்." (மத். 5:17) என்று அறிவித்தார்.
அதனால் உருமாற்ற மலையில் மோசே இயேசுவின் அருகில் நிற்பது, சட்டம் கிறிஸ்துவில் தனது நிறைவை அடைகிறது என்பதைக் குறிக்கிறது.
சட்டம் இரட்சிப்பை அளிக்கவில்லை; அது இரட்சகரை நோக்கிச் சுட்டிக்காட்டியது.

## 6.2. எலியா - இறைவாக்கினர்களின் பிரதிநிதி

எலியா பழைய ஏற்பாட்டின் மிகச் சிறந்த இறைவாக்கினர்களில் ஒருவர்.
அவர் பாகால் வழிபாட்டிற்கு எதிராக நின்றார்.
இறைவனின் உடன்படிக்கையை மீட்டெடுக்க போராடினார்.மேலும், அவர் மரணத்தை அனுபவிக்காமல் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் (2 அரசர் 2:11).
யூத மரபின்படி, மெசியா வருவதற்கு முன் எலியா மீண்டும் வருவார் (மல்கியா 4:5).

எனவே எலியாவின் தோற்றம், "மெசியா வந்துவிட்டார்" என்ற பரலோக அறிவிப்பாகும். எலியா பிரதிநிதித்துவப்படுத்துவது ஒரே ஒரு தீர்க்கதரிசியை அல்ல; முழு இறைவாக்கினர் மரபையும்.
அவர்களின் எல்லா தீர்க்கதரிசனங்களும் கிறிஸ்துவில் நிறைவேறுகின்றன.

## 6.3. சட்டமும் இறைவாக்கினர்களும் கிறிஸ்துவில் சந்திக்கின்றன

பழைய ஏற்பாட்டை யூதர்கள் இரண்டு பெரிய பகுதிகளாகச் சுருக்கிக் கூறுவார்கள்:

- சட்டம்
- இறைவாக்கினர்கள்

அதனால், மோசேயும் எலியாசும் ஒரு முழு பழைய ஏற்பாடு என்பதே. இறையியல் அடையாளம். இருவரும் இயேசுவின் அருகில் நிற்பது,
"முழு பழைய ஏற்பாடும் கிறிஸ்துவை நோக்கியே பயணித்தது"
என்பதை அறிவிக்கிறது.
இதனால்தான் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இயேசு, "மோசேயின் சட்டத்திலும் இறைவாக்கினர் நூல்களிலும் திருப்பாடல்களிலும் என்னைப் பற்றி எழுதப்பட்டுள்ள அனைத்தும் நிறைவேற வேண்டும்." (லூக். 24:44) என்று கூறுகிறார்.

## 7. தாபோர் மலையும் கல்வாரியும்

உருமாற்றமும் கல்வாரியும் — இரண்டும் பிரிக்க முடியாதவை
தாபோர் மலையில் மகிமை வெளிப்பட்டது.
கல்வாரியில் அன்பு வெளிப்பட்டது.
தாபோரில் தந்தை, "இவர் என் அன்பார்ந்த மகன்" என்று அறிவித்தார்.
கல்வாரியில் அதே மகன் உலகின் பாவங்களைச் சுமந்தார்.
தாபோர் இல்லாமல் கல்வாரி புரியாது.
கல்வாரி இல்லாமல் தாபோர் முழுமையடையாது.
உருமாற்றம் சிலுவைக்கு அர்த்தம் கொடுக்கிறது; சிலுவை உருமாற்றத்திற்கு நிறைவைக் கொடுக்கிறது.

## 8. "உயர்ந்த மலையில் உருமாற்றம் *(மத். 17:1)*

என்பது இறைவனைச் சந்திக்கும் இடத்தின் அடையாளமாகும்.

- மோசே சீனாய் மலையில் இறைவனைச் சந்தித்தார்.
- எலியா ஓரேப் மலையில் இறைவனின் மெல்லிய குரலைக் கேட்டார்.
- இயேசு மலைகளில் ஜெபித்தார்.
- சிலுவையும் ஒரு உயர்ந்த இடத்தில் அமைந்தது.

அதனால் மலை என்பது மனிதன் பூமியிலிருந்து விண்ணை நோக்கி உயர்வதையும், இறைவன் மனிதனைச் சந்திப்பதையும் குறிக்கிறது.

## 9. வெண்மையான ஆடைகள் — பரிசுத்தத்தின் அடையாளம்

விவிலியத்தில் வெண்மை என்பது



- பரிசுத்தம்
- வெற்றி
- உயிர்த்தெழுதல்
- விண்ணக மகிமை

ஆகியவற்றின் அடையாளமாக வருகிறது.
உயிர்த்தெழுந்த ஆண்டவரின் கல்லறையில் இருந்த தூதர்கள் வெண்மையான ஆடைகளை அணிந்திருந்தனர். திருவெளிப்பாடு நூலில் பரிசுத்தர்கள் வெண்மையான ஆடைகளை அணிந்துள்ளனர் (வெளி 7:9).எனவே இயேசுவின் வெண்மையான ஆடைகள், சிலுவைக்குப் பிறகு வரவிருக்கும் உயிர்த்தெழுதலின் முன்னறிவிப்பாகும்.

## 10. "இவர் என் அன்பார்ந்த மகன்" — பரலோகத் தந்தையின் அறிவிப்பு

மேகத்திலிருந்து ஒரு குரல் ஒலிக்கிறது: "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்.

இவருக்குச் செவிசாயுங்கள்." (மத் 17:5). இந்த அறிவிப்பு மூன்று உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

**முதலாவது**, இயேசு தெய்வ மகன்.

**இரண்டாவது**, அவர் தந்தையின் முழுமையான சித்தத்தை நிறைவேற்றும் பணியாளர்.

**மூன்றாவது**, இனி மோசேயின் சட்டமும், இறைவாக்கினர்களின் சாட்சியும் கிறிஸ்துவில் நிறைவேறுகின்றன;

ஆகவே இறுதித் தீர்மானமான வெளிப்பாடு கிறிஸ்துவே. அதனால் "இவருக்குச் செவிகொடுங்கள்" என்ற கட்டளை, கிறிஸ்துவின் வார்த்தை அனைத்திற்கும் மேலான அதிகாரம் கொண்டது என்பதை அறிவிக்கிறது.

## 11. ஏன் இந்த உருமாற்றம்?



சிலுவை வரப்போகிறது. சீடர்கள் சிதறிப்போகப் போகிறார்கள். அவர்கள் நம்பிக்கை குலையப்போகிறது. அதற்கு முன்பே இறைவன் அவர்களுக்கு ஒரு "மலை உச்சி அனுபவத்தை" அளிக்கிறார்.

சிலுவையில் அவர்கள் காணப்போகும் அவமானம் இறுதியல்ல என்பதை முன்கூட்டியே காட்டுகிறார். உருமாற்றம் என்பது **உயிர்த்தெழுதலின் முன்னோட்டம்**.

## *12. சீனாயிலிருந்து தாபோர் மலைவரை*

*இந்த இரண்டு மலைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், விவிலியத்தின் முழு இரட்சிப்பு வரலாறும் தெளிவாகத் தெரிகிறது.*

- ***சீனாய் மலையில்*** *மக்கள் மேகத்தைப் பார்த்துப் பயந்தனர்;* ***உருமாற்ற மலையில்*** *சீடர்கள் மேகத்திற்குள் அழைக்கப்பட்டனர்.*
- ***சீனாயில்*** *இறைவன் சட்டத்தை அளித்தார்;* ***உருமாற்ற மலையில்*** *சட்டத்தின் நிறைவேறுதலாகிய மகனை அளித்தார்.*
- ***சீனாயில்*** *"இதைச் செய்; வாழ்வாய்" என்ற கட்டளை ஒலித்தது;* ***உருமாற்ற மலையில்*** *"இவருக்குச் செவிகொடுங்கள்" என்ற இரட்சிப்பின் அழைப்பு ஒலித்தது.*
- ***சீனாயில்*** *மோசே மட்டும் மேகத்திற்குள் சென்றார்;* ***உருமாற்ற மலையில்*** *பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய சீடர்களும் அந்த மேகத்தின் நிழலில் நின்றனர்.*
- ***சீனாயில்*** *உடன்படிக்கை கல் பலகைகளில் எழுதப்பட்டது;* ***உருமாற்ற மலையில்*** *உடன்படிக்கையின் நிறைவு இயேசு கிறிஸ்துவின் திருமேனியில் வெளிப்பட்டது.*

*மேகத்திலிருந்து வந்த அந்தக் குரல் இன்றும் திருச்சபைக்கு ஒலிக்கிறது:* ***"இவருக்குச் செவிகொடுங்கள்."*** *இதுவே கிறிஸ்தவ விசுவாசத்தின் இதயத் துடிப்பாகும். செவி கொடுப்போம்*

## *13. விசுவாசிகளுக்கான எதிர்கால மகிமையின் முன்னறிவிப்பு*

*திருத்தூதர் பவுல் கூறுகிறார்: "அவர் தமது ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை மாட்சிக்குரிய தமது உடலின் சாயலாக உருமாற்றவும் அனைத்தையும் தமக்குப் பணியவைக்கவும் வல்லவர்." (பிலி 3:21)*

*உருமாற்றம் இயேசுவுக்கே மட்டுமல்ல. கிறிஸ்துவில் வாழ்பவர்கள் ஒருநாள் மகிமையில் பங்குகொள்வார்கள். இன்று நாம் சுமக்கும் சிலுவை நாளை மகிமையாக மாறும்.இன்று கண்ணீர் இருக்கும்; நாளை நித்திய ஆனந்தம் இருக்கும்.*

*உருமாற்றம் என்பது கடந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்வு மட்டுமல்ல; ஒவ்வொரு விசுவாசியின் ஆன்மிகப் பயணத்திற்கும் ஒரு வரைபடமாகும்—ஜெபத்திலிருந்து மாற்றம், மாற்றத்திலிருந்து சாட்சி,*
*சாட்சியிலிருந்து சிலுவை,*
*சிலுவையிலிருந்து மகிமை,*
*மகிமையிலிருந்து நித்திய வாழ்வு*
*என்ற இரட்சிப்பின் பாதையை அது வெளிப்படுத்துகிறது.*

